NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு | 24 ஆகஸ்ட் 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சமுதாயம் – இறைவாக்குரைத்தல் காணக்கூடிய ஒத்துழைப்புக்கு அழைப்பு



# நமது நம்பிக்கையில் தேர்ந்துதெளிதல்

இந்த வாரம் தீபகற்ப மலேசிய ஆயர் மன்றத்தைத் தொடங்கும் வேளையில் மூன்று மறைமாவட்டங்களிலிருந்தும் அருள்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் ஒன்றுகூடுகின்றனர். நம்முடைய தேசத்தின் சுதந்திர தினம் நெருங்கிவருவதால், தீபகற்ப மலேசியாவில் ஒரு திருஅவையாக நமது பயணத்தைப் பற்றி சிந்திக்கவும், நமக்கான கடவுளின் விருப்பத்தைத் தேர்ந்துதெளிந்து புரிந்துகொள்ளவும் இந்த மன்றம் நமக்கு ஒரு வாய்ப்பாகும்.

நம்முடைய திருஅவை அல்லது மறைமாவட்டமாக நாம் ஓரளவு வெற்றியடையும்போது, நமது வழிதான் சிறந்தவழி அல்லது மோசமானது , ஒரே வழி என்று நாம் எளிதில் நம்பிவிடுவோம். இந்த மனநிலை நிச்சயமாக நம்மை ஆபத்தான தற்பெருமைக்கு இட்டுச் செல்லும். நம்மிடம் இதற்கான அனைத்து பதில்களும் உள்ளது, அல்லது மற்றவர்கள் நீதிக்காக நமது பாதையைத் தான் பின்பற்றவேண்டும் என்று நினைக்கத் தோன்றும்.

இயேசுவின் காலத்தில், பல சமயத்தலைவர்கள் இந்தப் பொறியில் தான் விழுந்தனர். அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள ‘பாவிகள்’ கூட்டத்திலிருந்து தங்களைத் தனித்துக் காட்டிக்கொண்டனர். சமய நடைமுறைகளை அவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதால், கடவுளின் அரசில் தங்களுக்கு இடமுண்டு என்று நம்பினார்கள். ஆனால் இயேசு தம் சீடர்களை இந்த அணுகுமுறைக்கு எதிராக எச்சரித்தார். பலர் குறுகிய கதவு வழியாக நுழையத் தவறிவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டினார். சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் விண்ணகத்தில் ஒரு இடம் பெறுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்பதை உணர அவரது வார்த்தைகள் நமக்கு சவால் விடுக்கின்றன. நமக்கு கடவுளின் இரக்கம் தேவை என்பதையும் செல்வம், அதிகாரம், சமய நடைமுறைகளைப் பின்பற்றுவது என்பது நேர்மைத்தனத்தின் உண்மையான அளவுகோல்கள் அல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ள அவர் நம்மை அழைக்கிறார்.

இன்றைய இரண்டாம் வாசகம் இதை மேலும் உறுதிப்படுத்துகிறது. கடவுள் யாரைத் தம் பிள்ளைகள் என்று அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார் என்று கூறுகிறது. அவரது ஒழுங்குமுறைகள், வேதனையாக இருந்தாலும், நாம் சொந்தமாக அடையக்கூடியதைவிட அதிகமான அமைதி மற்றும் நன்மையை நோக்கி நம்மை வழிநடத்துகிறது.

**வரவிருக்கும் வாரத்தில் இதைப் பற்றி தேர்ந்துதெளிய திருஅவை நம்மை அழைக்கிறது. - நம்மை நாமே ஆராய்ந்து நமது திருஅவை, நமது பணிக்குழுக்கள், நமது மறைமாவட்டங்களுக்கு நாம் தற்போது செய்வது உண்மையிலேயே மக்களுக்குத் தேவையானதா, கடவுள் இதை விரும்புகிறாரா என்று சுயஆய்வு செய்வது அவசியம்.** இது நமது யூகங்களுக்கு சவாலாய் இருக்கும் கருத்துகளைக் கருத்தில் கொள்வதைக் குறிக்கலாம். அல்லது நாம் பிறரை எவ்வாறு அன்பு செய்கிறோம் மற்றும் பணி செய்கிறோம் என்பதை மறுபரிசீலனை செய்வதைக் குறிக்கலாம். குறிப்பாக நாம் அனைவரும் மறைபோதகம் என்னும் கடமையைச் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இதனால் நம்மால் மறைபோதகத்திற்கு உண்மையாக இருக்கவும் புதிய மறைபோதக வழிகளைத் திறக்கவும் முடியும்.

கடவுளுக்கு முன்பாக குழந்தைகளைப் போல இருக்கவும் அவர் கண்டித்து திருத்துவதை வெளிப்படையாகவும், தாழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளவும், புதிய நுண்ணறிவுகளுக்கு, நமது நம்பிக்கையை வாழவும் அவர் நம்மை வழிநடத்தும் அந்த அருளுக்காக இறைவேண்டல் செய்வோம்.

நமது ஒரே விருப்பமும் ஒரே தேர்வும் இதுவாகத் தான் இருக்கவேண்டும்: என்னை எது கடவுளை நோக்கிய ஆழமான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறதோ அதுவே என்னுடைய தேர்வும் விருப்பமும்.

- புனித லயோலா இஞ்ஞாசியார்

## இன்றைய இறைவார்த்தை:

எசாயா 66: 18-21

திருப்பாடல்: 117: 1-2

எபிரேயர் 12: 5-7, 11-13

லூக்கா 13: 22-30

INTERNAL CIRCULATION ONLY
BUL 34/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org